என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

216—

பயணியர் மாளிகை

***24611—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல், பார்த்திபனூர் மதகு அணையில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல், பார்த்திபனூர் மதகு அணையில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் இருக்கிறதா என்ற கேள்வியை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இம்மதகு அணை தேசிய நெடுஞ்சாலை 49–லிருந்து பிரிந்து, வன்னிக்குடி மற்றும் ஏனாதிக்கோட்டை செல்லும் பஞ்சாயத்து சாலை வழியாக சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இம்மதகு அணைக்கு பயணியர் வருகை இல்லாத காரணத்தால், பயணியர் விடுதி கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, வேதியரேந்தலில் அமைந்துள்ள பார்த்திபனூர் மதகு அணைப் பகுதியில், சிவகங்கை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் வைகை அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடும்பொழுது, இடது பிரதான கால்வாய்கள் சிவகங்கை மாவட்டத்திற்கும், வலது பிரதான கால்வாய்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தண்ணீரை மதகு அணைகள்மூலமாக பிரித்து விடுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்றது. தண்ணீர் வருகின்ற நேரத்தில், இரண்டு மாவட்டத்திற்கும் தண்ணீரைப் பிரித்து விடுவதற்கு வருகின்ற அதிகாரிகள் அங்கே தங்குவதற்கு இடமில்லாமல் இருக்கின்றது. ஆகவே, வைகை அணையிலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் விடுகின்ற நேரத்தில், அங்கே வந்து அதிகாரிகள் தங்கியிருந்து, இரண்டு மாவட்டத்திற்கும் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு வசதி வேண்டும். ஆகவே, அதிகாரிகள் வந்து தங்குவதற்கும், அங்கே வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் வந்து தங்குவதற்கு வசதியாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு புதிய பயணியர் மாளிகையைக் கட்டித்தர ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா*

2013 ஏப்ரல் 15]

அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

217—

நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு

***5717—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், பச்சைமலை பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரின் தொகுதிக்குட்பட்ட துறையூர் ஒன்றியத்திலே இருக்கின்ற பச்சைமலை பகுதியிலே, நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடை கிளை நிலையமோ, ஒரு மருந்தகமோ, ஒரு மருத்துவமனையோ அமைக்க முடியாத பகுதிகளுக்குத்தான் எங்கள் துறையின் மூலமாக நடமாடும் கால்நடை மருத்துவமனையை அனுப்பி அங்கே சிகிச்சைகளை செய்து வருகிறோம். உறுப்பினர் குறிப்பிடுகின்ற பச்சைமலை பகுதியிலே அரசின் விதிகளுக்குட்பட்டு 3,000—க்கும் அதிகமாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.